செய்தி வெளியீடு எண்: **996** **<u>நாள்: 21 .12.2009</u>**

## <u>அரசு செய்திக் குறிப்பு</u>

## <u>குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலக்கெடு நீட்டிப்பு</u>

தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் 31.12.2009 வரை செல்லத்தக்க வகையில் வழங்கப்பட்டுள்ளன. இதனிடையே தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தில் புழக்கத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைகளையும் 100% வீடுவீடாகச் சென்று தணிக்கை செய்து போலி குடும்ப அட்டைகளை கண்டுபிடித்து களையவும், உண்மையில் வசித்துவரும் குடும்பங்களின் குடும்ப அட்டைகளில் உள்ள விவரங்களை மேம்படுத்தவும் அரசு முடிவு செய்து இப்பணிகள் மாவட்டங்களில் நான்கு கட்டமாக நடைபெற்று வருகிறது. இந்த பணிகள் முடிந்து போலி குடும்ப அட்டைகளை ரத்து செய்து குடும்ப அட்டை தகவல் தொகுப்பை மேம்படுத்தும் பணிகள் 31.3.2010ல் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மேம்படுத்தப்பட்ட தகவல் தொகுப்பின் அடிப்படையிலும் தற்போது உள்ள தொழில்நுட்பங்களை பயன்படுத்தியும் புதிய குடும்ப அட்டைகளை வழங்குவதற்கு மேலும் சிறிது காலம் ஆகும் என அரசு கருதுகிறது. எனவே தற்போதுள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலத்தை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலத்தை 1.1.2010 முதல் 30.6.2011 வரை ஒன்றரை ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தற்போது குடும்ப அட்டைகளை பயன்படுத்திவரும் குடும்ப அட்டைதாரர்கள் அவர்கள் பொருள்கள் பெற்றுவரும் அதே நியாய விலை அங்காடியில் தற்போது வைத்துள்ள குடும்ப அட்டையிலேயே தொடர்ந்து பொருள்கள் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இவ்வாறு பொருட்கள் வழங்கும்போது அதற்கான பதிவுகள் ஏற்கனவே குடும்ப அட்டைகளில் உள்ள உள்தாளில் கூடுதலாக உள்ள பக்கங்களில் பதிவு செய்து கொள்ளவும், தேவைக்கேற்ப புதிய உள்தாள் நியாய விலை கடைகளிலேயே சேர்த்து ஒட்டவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**க. சண்முகம், இ.ஆ.ப.,**
அரசு முதன்மை செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.